ஓம்

# சச்சிதானந்தபோதம்

ராமன்

எழுதியது.

அத்வைதாஸ்ரமம்

ஸ்தலமலை,

சேலம்.

இஃது

ஆஸ்ரமத்தின் அன்பர்களால்

R. ராமா & பிரதர்ஸ், அச்சுக்கூடத்தில், அச்சிடப்பெற்றது.

ஓம்.

# சச்சிதானந்தபோதம்.

சுத்த சோதி சொரூப சுகத்தினை
பத்த ருய்யப் பரிந்தருள் தேவனை
நித்த நிற்குண நிமல மாதேவனை
நித்த மேத்தி நினைந்து வணங்குவாம்

தர்மார்த்த காமமோக்ஷமென்னுஞ் சதுர்வித புருஷார்த்தங்களுக்குள்ளும், மோக்ஷமே சிரேஷ்டமும், மனிதரால் அவசியம் அடையத்தக்கதுமாம்.

வினா:— மோக்ஷத்தின் சொரூபம் யாது?

விடை:— சர்வதுக்க நிவிர்த்தியும் பரமானந்தப் பிராப்தியுமே மோக்ஷத்தின் வடிவம்.

வினா:— மோக்ஷம் எச்சாதனத்தால் அடையப்படும்?

விடை:— அகண்டான்ம அபரோக்ஷ ஞானத்தால் அடையப்படும்.

வினா:— அபரோக்ஷஞானம் எதனாலடையப்படும்?

விடை:— விவேக சஹித சமாதியாலடையப்படும்.

வினா:— இவ்விரண்டு சாதனங்களில் ஒன்று போதுமே இரண்டும் வேண்டுமென்பதெதன்பொருட்டாம்?

விடை:— ஆன்ம அநான்ம விவேகமின்றித் தியான சமாதிகளைப் பழகுகின்றவர்கள் அந்தத்தில் நிரதிசயவடிவ ஆன்மலாபம் பெறுவது அதிதுர்லபமாம். அப்பழக்கங்களால், சூனியம், பிரகாசம், வெளி இவைகளில் ஏதேனுமொன்றைப் பெற்று ஆன்மலாபமடைந்தோமென்று அனேகர் கூறிக்கொள்ளுகின்றனர். இவ்வனுபவம் யதார்த்தமன்று சமாதியப்பியாசத்தோடு விவேகமுமுடைய மதிமான்கள், அதி சுலபமாகத்

தன் முயல்வாலும், குரு ஈஸ்வரக்கிருபையாலும் அகண்டானந்தவடிவ ஆன்மலாபம் அதிசுலபமாகப் பெறுவரென்க.

விசாரமாத்திரஞ் செய்து தியான அப்பியாசமின்றியவராயின், அவர்களும் நிரதிசய ஆனந்த சொரூபத்தை அபரோக்ஷமாக அறிந்தவராகார். ஏனெனின், கேவல விவேகஞ்செய்து தனது சொரூபம் சச்சிதானந்தமெனத் துணிந்த மனோவிருத்தி அசஞ்சல அதி சூக்ஷ்ம ஆன்மாவில் பாலில் கலந்த ஜலம்போல அபேதமாகவில்லையாகலின் என்க. அங்ஙனம் வெகு சூக்ஷ்ம புத்தியால், குசல விவேகத்தோடு அனான்மவர்க்கங்களைத் தள்ளி, ஆன்மா நான் என நிச்சயித்தபோது அந்நிச்சயமனத்தின் இருப்புண்மையே ஆனந்தானுபவத்திற்குத் தடையாகின்றது. அம்மனோவிருத்தி விவேகமாத்திரத்தால் ஆன்மாவில் இலயமாகாது; நிரந்தரம் நேயத்தோடு செய்யும் ஆன்மானுசந்தான மிகுதியால் மெல்ல மெல்ல ஜலத்திலிட்ட லவணம்போல ஆன்மாவில் அம்மனம் அபேதமாகும். அதனால் விவேகத்தோடு நியானதிவடிவ நிரோத அப்பியாசமும் அவசியம் வேண்டற்பாலதாம், என்க.

வினா :— விவேகம் எத்தனை வகைப்படும்?

விடை :— ஆன்ம, அனான்மாக்களைப் பிரித்தறியும் விவேகம் ஒன்றேயாயினும், அது மஹாவாக்கிய விவேகம், பஞ்சகோச விவேகமென இருவகைப்படும்.

வினா :— மஹா வாக்கியம் யாது? அதன் விவேகம் எத்தன்மையது?

விடை :— மண், பொன், வீடு, முதலிய இவ்வுலக விஷயங்களிலும், அப்சரஸ்திரீ அமுத முதலிய பரலோக விஷயங்களிலும், அசுத்தம், துக்கம், அநித்தியமென்னும் விவேகத்தால் நிராசையையடைந்து, உதாரம், பொறுமை முதலிய சத்குணமுடைய அதிகாரி பரமசிரேயசு வடிவ மோக்ஷ சுகத்தை இச்சித்து சத்குருவையடைந்து அவர் சந்நிதியில் தண்டம் போல விழுந்து நமஸ்கார தோத்திராதி வழிபாடுகளைக்

கிரமமாகச் செய்து, பின்னர் கூப்பிய கரமுடையவனாய் நின்றுகொண்டு, ஹே பகவன், விஷப்பாம்புகள் நிறைந்த கூபத்தில் கட்டுண்டு கிடப்பவன் படும் துன்பம்போன்று இச்சமுசார கூபத்தில் விஷயாபிமான வடிவ விஷத்தால் துக்கிக்கும் தீனனான என்னை கிருபாநிதியாகிய தாங்களே இரக்ஷித்தல் வேண்டும், என்று விண்ணப்பித்தனனாக.

இங்ஙனம் உண்மையாகத் தனது துக்க நிவிர்த்தியை விரும்பிய அதிகாரியைப் பார்த்து ஆசிரியர் "தத்துவமசி" என்னும் வாக்கியத்தை அர்த்தத்தோடு உபதேசித்தருளா நிற்பர். அவ்வாக்கியத்தில் உண்டாம் அர்த்த விரோதத்தை "பிரக்ஞானம் பிரஹ்மம்" என்னு மஹாவாக்கியத்தால் ஆசிரியர் விவேசனவாயிலாக நிவிர்த்தி செய்வர். அங்ஙனமாய விவேகத்தைப் பூரணமாகப் பெற்ற அதிகாரி தன்னை அகண்டேகரச ஆன்ம வடிவமெனத் துணிந்து, அவ்வர்த்த வடிவ "அஹம்பிரஹ்மாஸ்மி" என்னு மஹா வாக்கியத்தை அர்த்தத்தோடு அனுசந்திப்பன். அவ்வனுசந்தானத்தினால் உண்டாம் அபரோக்ஷஞானத்தின் பிறகு நிகழும் அகண்டாகாரவிருத்தி "அயமான்மா பிரஹ்மம்" என்னு மஹா வாக்கிய வடிவினதா மென்க. இதனால் மஹாவாக்கியம் "தத்துவமசி" "பிரக்ஞானம் பிரஹ்மம்" அஹம்பிரஹ்மாஸ்மி" "அயமான்மா பிரஹ்மம்" என நான்கு வகைப்படும். அவைகளின் அர்த்த விவேகம் பின்வருமாறு:—

சாமவேதத்தின் சாந்தோக்கிய உபநிடதத்தில் உத்தாலகர், தன் புத்திரனாகிய சுவேதகேதுவிற்கு ஜகத்காரண ஈசுவரனைக்காட்டித் "தத்துவமசி" என்று கூறினர். அதனர்த்தமிதுவாம்:— தத் = அது அதாவது, மாயை, அதில் பிரதிவிம்பம், அதிஷ்டான சேதன மூன்றுங்கூடி, சர்வக்ஞத்வாதி கலியாண குணங்களையுடைய ஈசுவரன் "த்வம் = நீ, அதாவது, வியஷ்டி அவித்தை அதில் பிரதி விம்பம், அதிஷ்டான சேதனமூன்றுங்கூடி அற்பக்ஞத்வாதி ஹீன குணங்களையுடைய ஜீவன். அஸி = இருக்கிறாய். என்பன பொருள். எனவே அது நீயாயிருக்கிறாய் என்பது தத்துவமஸி மகாவாக்கியத்தின் அர்த்தமாமென்க.

இச்சீவேஸ்வராிருவருக்கும் தத்துவமசி மகா வாக்கியம் அபேதமுண்டென்பதைப் போதிக்கின்றது. இது பொருந் தாதாகலின், ஆபாசசகிதமாயை, அதன் காரியமான சர்வக் ஞத்வாதி குணங்களோடு கற்பிதபாகத்தைவிட்டு சேதன பாகத்தில் தத்பதத்தின் பாகத்தியாக லக்ஷணை செய்க.

அங்ஙனமே ஆபாசஸஹித அவித்தை, அதன் காரிய மான அற்பக்ஞத்வாதி குணங்களோடு கற்பித பாகத்தை விட்டுசேதனபாகத்தில் துவம்பதத்தின் பாகத்தியாக லக்ஷணை செய்க.

இங்ஙனஞ்சீவேஸ்வரரது சொரூபத்தில் இலக்ஷியமான சேதன பாகமாகிய பிரத்தியக் பிரஹ்ம சைதன்னியங்களின் ஏகத்துவத்தை "தத்துவமசி" மஹாவாக்கியம் போதிக்கின் றது.

அங்ஙனமே பிரக்ஞானம் பிரஹ்மம் என்னும் வாக்கி யத்தில் பிரக்ஞான பதத்திற்கு அவித்தியாவிசிஷ்டஜீவனும் பிரஹ்மபதத்திற்கு மாயாவிசிஷ்ட ஈசுவரனும் அர்த்தம். இவைகளிலுமுன்போல கற்பிதபாகங்களைவிட்டு சேதனபா கங் கொள்ளப்படுகின்றது. இவ்வாறே ஏனைய வாக்கியங்க ளிலும் அகம், ஆன்மா என்னும் பதங்களுக்குச் சீவனும், பிரஹ்ம பதங்களுக்கு ஈசுவரனும், அருத்தமாவர். இங்கும் கற்பித பாகங்களைவிட்டுச் சேதனபாகங்கள் கொள்ளப்படு கின்றன.

வினா:— பஞ்ச கோசவிவேகம் யாது?

விடை:— நன்றாக யெறிந்துகொண்டிருக்கும் தீபம் ஐந்து திரைகளால் மூடப்பட்டிருக்குமாயின் அத்தீபப்பிரகாசம் நன்றாக வெளி யில் விளங்குவதில்லை. மற்றுசாமானியமாகவே விளங்கும். அங்ஙனமே சொப்பிரகாச சைதன்னிய வடிவத்தனை, அன்னமயம், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயம், ஆனந்தமயமென்னும் ஐந்து கோசங்களாகிய திரைகள் மூடிக்கொண்டிருக்கின்றன. அதனால் நான், நான் என சாமானியமாக விளங்குகின்றதேயன்றி, நான் சேதனன்,

ஆனந்தன் நித்தியமுக்தன் என்றலாதி விசேஷ வடிவத்தால் தனது சொரூபம் விளங்குவதில்லை.

புத்திமான் இவ்வன்னமயாதி ஐங்கோசங்களினின்றும், தனது ஆன்ம சொரூபத்தை வேறு பிரித்துத் திரைநீக்கிய தீபம்போல அபரோக்ஷமாக அறிவதுவே பஞ்சகோசவிவேக மென்றறிக.

வினா :— இவ்வைங்கோசங்களில் அன்னமயகோசம் எவ்வாறு ஆன்மாவை மறைத்திருக்கிறது?

விடை :— வீடுவாசல்களில் நிறைந்துள்ள தூசு, துரும்பு, எச்சிலை முதலியவைகளையெல்லாம் கூட்டி ஒரு தொட்டியில் கொட்டி வைக்கின்றார்கள். அவைகளை ஒன்று சேர்த்து குப்பை, அல்லது கசுமலமென்கிறோமல்லவா? அதுபோல், மாதா பிதாக்கள் உண்ட அன்னபானாதிகள் ஜீரணமாகி மலம், மூத்திரம், சுக்கிலசுரோணிதமாகிய கசுமலங்களாகப் பரிணமிக்கின்றன; அவைகளில் மலமூத்திரமொழிந்த, சுக்கில சுரோணிதங்களாலாகியதும் தோல் ரத்தம், மாமிசம், நரம்பு, எலும்பு, கொழுப்பு என்னும் ஆறு தத்துவங்கள் சேர்ந்ததும் கருப்பத்தில் தாய் உண்ட அன்னரசத்தாலும், ஜனித்தபின் பால், அன்னமுதலியவைகளாலும் விருத்தியடைவதும், கரசரணாதி அவயவ ஆகாரமுடையதுமான இத் தூலதேகமே அன்னமயம்.

இரத்தினமணியை புழுதி மறைத்தல்போல நான் என்னும் சப்தத்தின் உண்மை அர்த்தமான சைதன்னிய வடிவை தன்னை; நான் மனிதன், நான் ஆண் பெண், நான் கருப்பு சிகப்பு, நான் நெட்டையன் குட்டையன் என்றலாதி தருமங்களின் அபிமான வடிவத்தால் இத்தூல சரீரம் மறைத்தலால் கோசமாம், கோசம் = மறைப்பு.

வினா :— இவ்வன்னமய கோச நீக்க உபாயம் யாது?

விடை :— இதுதூண், இதுகடம் என்னும் விருத்திகட்கு விஷயமான தூண், கடம் ஆகிய விரண்டும் திருஷ்டாவுக்கன்னியங்களே

யாகலின் எங்ஙனம், இதம் விருத்திக்கே விஷயமாமோ அஹம் விருத்திக்கு விஷயமாகாவோ; அங்ஙனமே பூதகாரியமெனவும், அஞ்ஞமாவெனவும் சுருதியில் கூறியிருக்கப்பட்ட சர்மாதி ஆறுதத்துவ வடிவஸ்தூலசரீரத்தை சாக்ஷி வடிவயான். இது தோல், இது ரத்தம் இது மாமிசம், இது நரம்பு இது எலும்பு, இது கொழுப்பு என்றிவ்வாறு இதம் விருத்திக்கு விஷயமாகக் காண்கின்றேனாதலின்; அகம் விருத்திக்கு விஷயமான நான் ஒருக்காலும் இதம் விருத்திக்கு விஷயமான தூலசரீரமாக ஆகேன்.

அன்றியும் தூல சரீரம் ஆத்மாவன்று, காரியமாதலால், சடமாதலால், பரிச்சின்னமாதலால், கடம்போல.

அன்றியும் சொப்பனாவஸ்தையில் அங்கமயமாகிய ஸ்தூலதேகம் விளங்காத காலத்துப் பிரத்தியகாத்மா சொப்பனசாக்ஷியாக விளங்குதல் ஆத்மாவின் அந்வயமாம். அச்சொப்பனாவஸ்தையிலேயே ஆன்மா சொப்பிரகாசமாக விளங்கியும் தூலதேகம் விளங்காதிருத்தல் தூலதேகத்தின் வெதிரேகமாம். இவ்வாறு விவேகஞ்செய்தல் யாது அது தூல சரீரத்தை நானல்லவென்று நீக்கற்கு உபயமாமென்க.

வினா :— பிராணமயகோசம் எவ்வாறு ஆன்மாவை மறைத்திருக்கிறது?

விடை :— உசுவாச நிசுவாச வியாபாரமுடைய பிராணனும் கருமேந்திரியங்களுஞ் சேர்ந்து பிராணமயம். இவைகள் புருஷனைச் சட்டைமறைத்தாற்போல, நான் என்னும் சப்தத்தின் யதார்த்த அர்த்தமான சைதன்னிய வடிவைதன்னே, நான் ஜீவிதன், நான் பெலவான், நான் பெலஹீனன், நான் வாக் சாதுரியன், நான் கொடுத்தேன், வாங்கினேன், நான் நடந்தேன் என்றலாதி அபிமானங்களால் மறைத்தலின் கோசமாம்.

வினா :— பிராணமய கோசநீக்க உபாயம் யாது?

விடை :— கடத்தையறிபவன் கடத்திற்கு வேறாகவிருந்து கடத்தைத்

சுட்டி அறிவதால், எங்ஙனம் புருஷன் கடத்தினும் வேறோ, அங்ஙனமே, நித்திய சாக்ஷிவடிவ நான் பிராணன் உசுவாசம் செய்யும்போதும், நிசுவாசம் செய்யும்போதும், பெலமுடையதாக உள்ளபோதும், பெலமின்றியதாக உள்ளபோதும் வேறாகவேயிருந்து பிராண வியாபாரங்களை அறிகின்றேன். வாக்கு வசனிப்பதையும், வசனியாதிருத்தலையும், கைகால் முதலிய இந்திரியங்கள் கொடுக்கல் வாங்கல் நடத்தலாதிய வியாபாரஞ்செய்வதையும் அவ்வியாபாரம் செய்யாதிருப்பதையும் நான் அறிகின்றேன்; ஆனதால் சாக்ஷிவடிவ என்னினும் பிராணமயகோசம் கடம்போல அன்னியமேயாம் ஒருக்காலும் நானன்று.

அன்றியும் பிராணமயகோசம் ஆத்மாவன்று, உசுவாச நிசுவாசமுடையதாதலின், ஜடமாதலின், பரிச்சின்னமாதலின், கொல்லன் துருத்தியைப்போல்.

அன்றியும், சுழுத்திகாலத்தில் பிராணன் உசுவாச நிசுவாசம் செய்துகொண்டிருந்தும் முன்னிருக்கின்ற கள்வர், நண்பர், உறவினர் முதலிய யாரையும் அறிவதில்லை. இதனால் ஜடமென்பது பிரசித்தமாம். யாது ஜடமோ அது அனான்மாவேயாம் என்க. இவை முதலிய விவேகங்கள் பிராணமயகோச நீக்க உபாயமாம் என்க.

வினா :— மனோமயகோசம் எவ்வாறு ஆன்மாவை மறைத்திருக்கிறது?

விடை :— காமம், சங்கல்பம், விகல்பம் முதலிய நானாவித பரிணாமமுடைய மனமும் ஞானேந்திரியங்களுஞ்சேர்ந்து மனோமயமாம்.

புளியம்பழத்தை ஓடு மறைத்தாற்போல, நானென்னும் சப்தத்தின் யதார்த்த அர்த்தமான சைதன்னிய வடிவதன்னை, நான் காமி, நான் மோகி, நான் சங்கல்பித்தேன், நான் விகல்பித்தேன், நான் கேட்டேன், நான் தொட்டேன், நான் பார்த்தேன், நான் ருசித்தேன், நான் முகர்ந்தேன் என்றலாதி அபிமானங்களால் மறைத்தலின் கோசமாம்.

வினா :— மனோமயகோச நீக்க உபாயம் யாது?

விடை :— எங்ஙனம் நாடகதீபம், நடிகர் நடிக்கும்போதும், நடிக்கு முன்னும், நடித்து முடிந்தபிறகும், யாவற்றையும் விளக்குவது மாத்திரமாய் அந்நடிகர் யாவரினும் அந்நியமாமோ, ஒருகாலும் தான் அந்நடிகராவதின்றோ அங்ஙனமே; நித்திய சொப்பிரகாச ஜோதி வடிவயான் மனம் இந்திரியங்களாகிய நடிகர்கள், நாடகசாலையாகிய சரீரத்தில் காமம், சங்கல்ப மோகம், சப்தாதி விஷயதரிசனை முதலிய நாடகங்களை நடத்தும்போதும் அவைகளையறிகின்றேன்; அக்காமாதி விருத்திகள் உண்டாகா முன்னரும் அவைகளின்மையை அறிகிறேன். அவைகள் அடங்கும்போதும் அறிகின்றேன். ஆனதால்; சாக்ஷிவடிவன் என்னிடம் மனோமயகோசம் நடிகர்களைப் போன்று அன்னியமேயாம் ஒருக்காலும் நானாகேனென்க.

அன்றியும் மனோமயகோசம் நானன்று, கரணமாதலின், ஜடமாதலின், பரிச்சின்னமாதலின், கோடரியைப் போன்று. இவை முதலிய விவேகங்கள் மனோமயகோசநீக்க உபாயமாம் என்க.

வினா :— விஞ்ஞானமயகோசம் எவ்வாறு ஆன்மாவை மறைத்திருக்கிறது?

விடை :— சித்பிரதிபிம்பமாகிய சிதாபாசத்தோடு கூடியதும் நிச்சய வடிவினதுமான புத்தி, ஞானேந்திரியங்களோடு சேர்ந்து விஞ்ஞானமயமாம்.

தனத்தைப் பெட்டி மறைத்தல்போல நான் என்னும் சப்தத்தின் யதார்த்த அர்த்தமான சைதன்னிய வடிவ தன்னை, நான் மதிமான், நான் மதியீனன், நான் கர்த்தா, நான் கண்டேன், நான் கேட்டேன், என்பனாதி அபிமானங்களால் மறைத்தலின் கோசம்.

வினா :— விஞ்ஞானமயகோச நீக்க உபாயம் யாது?

விடை ;— எங்ஙனம், பயங்கரமாகப் பாய்ந்து செல்லும் நதிகளையும், சாந்தமாக நிற்கும் தடாகங்களையும், மகத்தான மலைகளையும் பூமிகளையும் தனது கிரணவடிவ ஜோதியால் [illegible]

றுமின்றிப் பிரகாசிப்பிக்குஞ் சூரியனினும், அந்நிமலையாதிகள் அந்நியமாமோ; அங்ஙனமே நித்தியசொப்பிரகாசனாகிய யான், புத்தி, கடாதி விஷயங்களை நிச்சயிக்கும்போதும், அவ்விஷயங்களை நிச்சயஞ்செய்யாதபோதும், நுண்மையான விவேகஞ்செய்யும்போதும், தூலமான விவேகஞ்செய்யும்போதும், செவி முதலிய இந்திரியங்கள் சப்தாதி விஷயங்களைக் கிரஹணஞ்செய்யும்போதும், சப்தாதி விஷயக் கிரஹணமின்றியபோதும், இவைகளுக்கு வேறாய்ப் பற்றின்றி நன்றாக அறிகின்றேனாதலின்; சாக்ஷிவடிவ என்னினும் இவ்விஞ்ஞானமயகோசம் அன்னியமேயாம்.

அன்றியும் விஞ்ஞானமயகோசம் ஆத்மாவன்று, விகாரியாதலின்; ஜடமாதலின், பரிச்சின்னமாதலின், கடத்தைப்போல. இவை முதலிய விவேகங்கள் விஞ்ஞானமயகோசநீக்க உபாயமாம் என்க.

அன்றியும், பிராணமயம், மனோமயம், விஞ்ஞானமயமிம்மூன்றும் சூக்ஷ்ம சரீரவடிவமாம். சுழுத்தியில் இம்மூன்று கோசவடிவ சூக்ஷ்மசரீரம் தோன்றாதகாலத்து, ஆன்மா அவ்வவஸ்தையின் சாக்ஷியாக விளங்குதல் ஆத்மாவின் அந்வயமாம். ஆத்மாவிளங்குங்காலத்து இலிங்கசரீரம் விளங்காதிருத்தல் இலிங்கதேகவடிவ மூன்றுகோசங்களின் வெதிரேகமெனப்படும்.

வினா :— ஆனந்தமயகோசம் எவ்வாறு ஆன்மாவை மறைத்திருக்கிறது ?

விடை :— புண்ணியபலமான சத்துவவிருத்தியுண்டாகும்போது, அவ்விருத்தி அந்தர்முகமாய் ஆத்மானந்தத்தின் லேசத்தைப் பெறுகின்றது, அதனோடு சுழுத்தியிலுள்ள அவித்தையின் கூறுண்டாம் சொரூபபூத ஆனந்தலேசமுஞ்சேர்ந்து ஆநந்தமயமாம்.

பிரசண்ட (மத்தியான) சூரியனைக் கார்மேகமறைப்பது போன்று, நான் என்னுஞ் சப்தத்தின் யதார்த்த அர்த்தமான சாக்ஷிவடிவந்தன்னை நான் சுகி, நான் போகி, நான் சுகமாய்த் தூங்கினேன் என்றலாதி அபிமானங்களான் மறைத்தலின் கோசமாம்

வினா :— ஆநந்தமய கோசநீக்க உபாயம் யாது?

விடை :— எங்ஙனம் கடாதி திருசியபதார்த்தங்களை அறியும் திருஷ்டாவி னும் அக்கடாதி திருசியபதார்த்தங்கள் அன்னியமாமோ; அங்ஙனமே பிரத்தியக்சாக்ஷிவடிவயான், ஓர்கால் புண்ணி யத்தின் பலமான அந்தர்முக சத்துவவிருத்தியில் உளவா கும் சொரூபானந்த சுகாகார விருத்தியுளதாகும்போதும், அச்சுகாகார விருத்தி முன்பின் இல்லாதிருக்கும்போதும், நன்றாக அறிகின்றேன். ஆனதால் சங்கோசவிகாசவடிவ அவ்விருத்திகளுக்கு அன்னிய சாக்ஷிரூபன்யான்.

சுழுத்தியினின்றும் எழுந்தவுடன் உறக்கத்தில் அநுப வித்த சுகாகாரதமோ ஆகாரவிருத்தி விஷயமான, ஆனந்ததமங்களின் ஸ்மிருதி ஒன்றுமறியாது சுகமாய்த் தூங்கினேன் என்றுண்டாகிறது ஸ்மிருதி அநுபவமின்றி உண்டாவதில்லை; ஆகவே சுழுத்தியில் சுகாகார தமோ ஆகார விருத்திகளையனுபவிக்கும் சாக்ஷிவடிவ என்னினும் சத்து வாதி விருத்திவடிவ அவ்வஞ்ஞானம் அன்னியமேயாம்.

அன்றியும் ஆனந்தமயகோசம் நானன்று, ஓர்போது (அதாவது புண்ணியபல அநுபவகாலம் நித்திரைகாலம்) உள தாதலின், மேகத்தைப்போல.

அன்றியும் சமாதியில் அஞ்ஞானம் விளங்காதிருக்கும் போது ஆத்மா ஆனந்தவிண்ணாய் விளங்குதல் ஆன்மாவின் அந்நுவயமாம். அங்கு ஆன்மாவிளங்கியும் முக்குணவடிவ அஞ்ஞானந்தோற்றாதிருத்தல் அவ்வஞ்ஞானத்தின் வெதி ரேகமாம். இவை முதலிய விவேகங்கள் ஆனந்தமயகோச நீக்க உபாயமாம் என்க.

இப்பஞ்சகோசங்கள் ஓரவத்தையிலுள்ளது மற்றோ ரவத்தையிலின்மையினாலும், நன்றாகப்பிரித்துப் பார்க்கும் போது ஓர் பொருளாக நில்லாமையினாலும், அசத்தாம். சாக்ஷிவடிவயான் சகல அவத்தைகளிலும் நித்திய சொப்பிர காசனாக விளங்குதலாலும், நன்கு சோதிக்குமிடத்து எஞ்சி நிற்கும் சர்வத்திர அதிஷ்டானமாக நிற்றலாலும் சத்து.

இப்பஞ்சகோசங்கள் கடம்போல சுட்டியறியும் பொருளாயிருத்தலின் ஜடமாம்; நான் இவைகளையறியும் சாக்ஷி வடிவனாதலின் சித்தாம்.

இப்பஞ்சகோசங்கள் அவமே கைவிடப்படுதலின் துக்க வடிவமாம். சாக்ஷிவடிவயான் ஒருபோதும் கைவிடப்படாமல் மேலான பிரியத்திற்கு விஷயனாதலின், ஆனந்தமாம்.

இவ்வாற்றால் மூன்று சரீரவடிவ பஞ்சகோசங்கள் அசத்து சட துக்கவடிவினதாம் இவைகளின் சாக்ஷி வடிவயான் சச்சிதானந்த சொரூபனாவேன்.

வினா:— வியஷ்டி சரீரமாத்திரத்தின் விசாரம் செய்யப்பட்டது. இவ்வளவு மாத்திர விசாரத்தால் புருஷார்த்தம் அடையப்படமாட்டாதன்றோ? சமஷ்டி சரீரவடிவ பரமேஸ்வர உபாதிகளினின்றும் அகண்டசைதன்னியத்தைப் பிறித்தறிவதெப்படி ?

விடை:— சமஷ்டி ஸ்தூலசரீரங்களும், தூலமஹா பூதங்களும் சேர்ந்து ஈஸ்வர ஸ்தூலசரீரம். சமஷ்டி சூக்ஷ்மசரீரங்களும் சூக்ஷ்ம பூதங்களுஞ்சேர்ந்து ஈஸ்வரசூக்ஷ்ம சரீரம். அவ்வியாகிருத வடிவமாயை ஈஸ்வரகாரண சரீரம். இவைகளில் விராட்சரீரம் சிருஷ்டியில் தூலபூத உற்பத்திக்கு முன்னும் பிரளயகாலத்தில் தூலபூதங்கள் அழிந்தபின்னும் இருப்பதில்லை. இதனால் விராட்சரீரம் அசத்து சட துக்கவடிவமாம். இரணிய கருப்பசரீரம் பிரளயவடிவ அவ்வியாகிருத அவஸ்தையிலும் சிருட்டிக்குமுன்னும் இருப்பதில்லை. இதனால் இரணிய கருப்பசரீரம், அசத்து ஜட துக்கவடிவமாம். அவ்வியாகிருத மாயை கயிற்றில் பாம்புபோன்று சுத்த சைதன்னியத்தில் கற்பிதமாம். அன்றியும் வித்துவானது சமாதிவடிவ அபரோக்ஷ ஆத்மசாக்ஷாத்கார அவஸ்தையில் மாயை விளங்குவதில்லை; அகண்டானந்த சொப்பிரகாச சைதன்னியமே விளங்குகின்றது. இதனால் மாயை அசத்து ஜட துக்கவடிவமாம்.

இவைகளுக்கு வேறான அகண்டசாக்ஷி வடிவசச்சிதானந்தப் பிரம்மமே எல்லா அவஸ்தைகளிலும் இருக்கு

அவைகளை விளக்குஞ் சோதிவடிவமாய் என்றும் நீங்காத பூமாவாதலின் சச்சிதாநந்தமாம். இவை முதலிய விவேகங்கள் சமஷ்டி உபாதிகளினின்றும் அகண்ட சைதன்னியத்தைப் பிறித்தறியும் உபாயங்களாம் என்க.

வினா:— இவ்வாறு சமஷ்டி வியஷ்டி உபாதிகளை நீக்கின் எஞ்சி நிற்கும் சைதன்னியங்களை எவ்வாறு சிந்தித்தல் வேண்டும்?

விடை:— எங்ஙனம் ஆகாயம் ஏகமாயினும் கடமட உபாதிபேதத்தானே வேறுபோலறியப்பட்டு, அக்கடமட உபாதிகளை நேதித்தபோது ஆகாயம் ஒன்றேயென்னும் யதார்த்த ஞானம் உண்டாகின்றதோ அங்ஙனமே சமஷ்டி வியஷ்டிவடிவ உபாதிபேதத்தானே அகண்ட சைதன்னியத்தில் ஜீவேஸ்வர பேதந்தோற்றுகின்றது. பூர்வம்போல வியஷ்டி சரீரங்களையும், சமஷ்டிசரீரங்களையும் நேதிசெய்ய சச்சிதாநந்த வடிவ பிரத்தியக்பிரஹ்ம சைதன்னியம் அகண்டானந்த சாக்ஷியாக மிஞ்சுகின்றது. ஆதலால் சேதனத்தில் யாண்டும் பேதபுத்திவையாது, அதிகாரி எப்போதும் உபாதிகளை சுருதி அனுசாரமான யுக்தியால் குரு உபதேசித்தவண்ணம் நன்றாக நேதி செய்து சச்சிதாநந்த வடிவன் யான் என்று சிந்திக்குக. ஒருபோதும் தேகம் நான் ஜகத்சத்தியம் என்ற புத்தியை வையாதொழிக.

வினா:— பூருவம் அபரோக்ஷஞானம் விவேகசகித சமாதியால் அடையப்படும் என்று கூறப்பட்டது; அவ்விரண்டில் இதுகாறும் விவேகம் சுருக்கமாகக்கூறப்பட்டது. மற்றைய சமாதியாது? அதனைப்பெறும் கிரமம் யாதாம்?

விடை:— எழுந்த சமஸ்காரங்களின் திரஸ்காரமும் நிரோதசமஸ்காரங்களின் பிரகடமுமுண்டாகி அந்தக்கரணம் ஏகாக்கிரமாதல் சமாதியெனப்படும். அச்சமாதி சவிகல்பம் நிருவிகல்பமென் இருவகைப்படும். இவைகளில் நிருவிகல்பம் சாத்தியவடிவினதும் சவிகல்பம் சாதனவடிவமுமாம். இச்சவிகல்ப சமாதி சித்தியின்பொருட்டு அதிகாரி முன்னர் நிதித்தியாசனஞ்செய்தல்வேண்டும்

நிதித்தியாசனத்தின் கிரமமிதுவாம்:— முன்னர்க்கூறிய பஞ்சகோசவிவேகத்தைக் கிரமமாகச்செய்துப் பின்னர் மனத்தை அநான்மாகாரமாகச்செய்யாது, ஆன்மாகாரமாகவே நிலைக்கும்படிக்குச்செய்து தைலதாரையைப்போன்று நிரந்தரம் நெடுங்காலம் நேயத்தோடு திரிபுடி சஹிதமாக உண்டாகாநிற்கும் ஆன்மாகாரமனோவிருத்தியின் பிரவாகம் யாது அது நிதித்தியாசனமெனப்படும்.

இங்ஙனம் நிரந்தரம் அநான்மாகாரமாக மனஞ்செல்லாமல் ஆன்மாகாரமாகவே நிலைப்பது ஆரம்பத்தில் யாருக்கும் சாத்தியமன்று; ஆனால் தீவிரவைராக்கியமும், அதிகுசல விவேகமுமுடைய புருஷசிரேஷ்டருக்கு மாத்திரம் சிறிதுகாலத்தில்ஆன்மாகாரமாக நிலைக்கும். மற்றைய வைராக்கியமின்றியவர்கள் அதிகமுயற்சியாலும் மீண்டு மீண்டும் விவேகஞ்செய்தலாலும்,விஷயத்தில் நிராசையைப் பூரணமாகச்சிரமப்பட்டாவது சம்பாதித்தலாலும், ஈஸ்வர குரு இவர்களது பிரசாதத்தாலும் சிலமாதம் அல்லது சிலவருஷங்களுக்குள் மனதின் ஏகாக்கிரதையுண்டாம். நிதித்தியாசனமே, சவிகல்ப நிருவிகல்ப சமாதிகளுக்குச் சாதனமானதும் மனத்தை ஒருமுகப்படுத்துவதுமாதலின், அதிகாரி எவ்விதசிரமப்பட்டாவது நிதித்தியாசனத்தை நன்றாகப் பழகுதல்வேண்டும்.

வினா:— அதிகாரி நிதித்தியாசனகாலத்து மற்றையகாலத்து மீண்டு மீண்டுஞ் செய்யும் விவேகப்பிரகாரம் யாது?

விடை:— உண்ணல் நடத்தல் முதலிய எல்லாவியாபார காலங்களிலும் தன்னை அசங்கசாக்ஷிவடிவனெனப் பிரித்தறிதல்வேண்டும். அங்ஙனமின்றி நான் கர்த்தா போக்தாவென்னும் புத்தியால் மீண்டு மீண்டும் துன்பக்கடலில் அவசியம் அழுத்தப்படுகின்றான். ஆனதால் எக்காலத்தும் எவ்வியாபாரங்களிலும் மற்றைய அசத்ஜடதுக்க அநித்தியவடிவதத்துவ சமூகங்களினின்றுந் தன்னைப் பிரித்தறிதல்வேண்டும். அவ்விவேகம் கீழ்வருமாறு:—

உண்ணுங்கால் செய்யும் விவேகம்:— புசிக்கப்படும் இவ்வன்னம் போக்கியம், இதனைப்புசித்தலால் உண்டாகும்

திருப்தி போகம், புசிப்பவனான ஆபாசத்தோடு கூடிய புத்தி போக்தா, நான் அபோக்தா.

இவ்வண்ணம் கருமம், எடுத்தல் மெல்லல் கிரியை, ஆபாசத்தோடு கூடிய புத்திகருத்தா, நான் அகர்த்தா.

இவ்வண்ணம் ஞேயம், இவ்வண்ணத்தின் விளக்கரூபமனோவிருத்தி ஞானம், ஆபாசனோடுகூடிய புத்தி ஞாதா, நான்சாக்ஷி. என்றிவ்வாறு கர்மதிரிபுடி, ஞானதிரிபுடி, போகதிரிபுடிகளினின்றுஞ் சாக்ஷிவடிவதன்னைப் பிரித்தறிதல் வேண்டும். மற்றைய வியாபாரங்களிலும் இவ்வாறு யூகித்துக்கொள்க.

நடக்குங்கால் செய்யும் விவேகம்:— ஒருவன் கடத்தை உருட்டித்தள்ளின், அப்போது மண்ணாலாயகடம் உருண்டு செல்லுகின்றது; அதனுள் நிறைந்துள்ள அசங்க ஆகாயம் செல்லுவதில்லை, எங்கு நிறைந்துள்ள அகண்டாகாயம் கடஞ்சென்றவிடமெல்லாம் அங்கங்கு நிறைந்து நிற்கின்றதாதலின் என்க. அங்ஙனமே, நடந்துசெல்லும்போது தூலசரீர தத்துவங்கள் 6, சூக்ஷ்மசரீர தத்துவங்கள் 20, காரணசரீர அவித்தை 1, அதில் பிரதிவிம்ப ஆபாசன் 1, ஆக இருபத்தெட்டு தத்துவசமூகங்களும் கடம்போல் செல்லுகின்றன. மாயை, அதன்கண் ஆபாசம் ஆகியவிரண்டும் செல்லுவதில்லை. இவ்வாறு செல்லுவனவும், செல்லாதனவுமான 30 தத்துவங்களுக்கும் வேறாய் ஆகாயம்போன்று யாண்டும் செல்லாத அகண்டசாக்ஷிவடிவனாக நான் இருக்கின்றேன் என்று தன்னைப்பிரித்தறிதல்வேண்டும்.

இவ்வாறு எக்காரியங்களிலும் தான் அக்கிரியன், அசங்கன் அபோக்தன், சாக்ஷி என்றிவ்வாறு பிரித்துப் பிரித்துச் சிந்தித்தலால் மனத்திற்கு ஆன்மநேயமுண்டாம். அந்நேயம் அதிகரிக்க அதிகரிக்கத் தியானந்தடையின்றி செய்வதற்கு ஏதுவாகும்.

வினா:— அப்பியாசஞ் செய்யும்போது பூர்வவாசனையின் பலத்தால் ஏதேனும் ஓர் விஷயத்தை முன்னர் ஸ்மரித்துப்பின் அதந்தங்கோடி விஷயாகாரமாக மனம்பரிணமித்துச் சஞ்சல

மடைகின்றது. அச்சஞ்சலகாரணமான மனத்தின் பரிரு
நீக்க உபாயம் யாது?

விடை:— தியானஞ்செய்யும் உத்தமர்கள் தமது தீவிர விவேகத்தா
தேக முதலிய சகல விஷயங்களையும் மித்தையெனத் தெளி
தவராயினும், ஆன்மாகாரமாக மனம் நிலைக்கும்படிப் பிரய
தனஞ்செய்யும்போது யாருக்கும் சிறிதுநேரம் அம்மன
நின்றதுபோலிருந்து மெல்ல ஏதேனும் பூர்வம் கண்டகேட்ட
விஷயங்களை ஸ்மரிக்க ஆரம்பிக்கும். அங்கு அதியன்ன
யான அருணம நிலைமை வளரவொட்டாது, அந்நினை
வடிவமனத்தை, நல்விவேக போதருவடிவ உபாயங்களா
ஆன்மாகாரமாக்கவேண்டும்.

அப்போதருவடிவ உபாயம் இதுவாம்:— ஏ மனமே
இத்துணைக்காலமாக நீ அங்குமிங்கும் ஓடித்திரிந்து அநுப
வித்த விஷயசுகங்களால் சிறிதேனும் திருப்தி யடைந்த
துண்டா இல்லையன்றோ? நீ நித்தியசுகவடிவ ஆன்மாவி
நிலைத்திரு இதனால் நிரதிசய சுகம்பெறுவாய். இந்நித்திய
சுகவடிவ என்னைவிட்டு எவ்விஷய இச்சையால் செல்லுகின்
றனையோ அவ்விஷயம் அநித்தியமும், அசுத்தமும், துக்க
மூமே சொரூபமானதன்றோ? சாக்ஷிவடிவயான் நித்திய
சுகசொரூபனன்றோ? இவ்விவேகம் உனக்கு அநேகப்பிரகா
ரங்களால் அநேகதடவை எடுத்துரைத்தும், நன்றுகஸ்நானஞ்
செய்து உண்டு மலரணையில் இருக்கச்செய்த சிறுபாலன்
அங்ஙனஞ்சுகமேயிராது வீதியில் விளையாடும் சிறுவர்க
ளோடு கூடிமகிழவெண்ணி ஓடி, மாறுக அவர்களால் மொத்
துண்டு துவென்று அலரி அழுது புழுதியில் புரண்டு எழுந்
துத் தாயின் சமீபத்தை மீண்டும் அடைவதுபோல் அநித்
திய துக்கவடிவ விஷயசம்பந்தத்தால் நீ துக்கமே அடைந்து
அநேககாலமாக வருந்தியும், மீண்டு மீண்டும் ஏன் அவ்விஷ
யங்களை நினைக்கின்றனை இனி கிஞ்சித்தும் கடாதி யாதொரு
விஷயங்களையும் நினையாதே; அந்நினைவால் அநேக சஞ்சல
வடிவ துக்கமே உனக்குண்டாம். ஆதலின் இனி ஒருபோ
தும் அநாத்ம விஷயங்களை நினையாதுவிட்டொழிதி, என்
றிவ்வாறு அநேகப்பிரகாரங்களால் மனதிற்கு நல்விவேகங்க
ளைக்கூறி அகமுகமாக்கி அகண்டசச்சிதாநந்தவடிவ தன்னி
டத்தில் நிலைபெறச்செய்வது யாது அது மனத்தின் சஞ்சல
பரிருமை நீக்க உபாயமாமென்க.